**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>**

**<u>அ.வ.எண். 381/2025</u>**

2026–ம் வருடம் ஜுன் திங்கள் 04–ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக வா.சா.1–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | : **ரமேஷ்பிரபு** | **தொழில்** | : |
| **த/பெ.** | : | **வட்டம்** | : |
| **முகவரி** | : | **மதம்** | : |
| **ஜாதி** | : | **வயது** | : |

**<u>முதல் விசாரணை</u>:–**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 10.04.2023 தேதியிட்ட வையாபுரி, குணமதி ஆகிய மூவரும் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 10.04.2023 தேதியிட்ட வாதிக்கு 1 ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 29.11.2023 தேதியிட்ட கண்மணி, கலையரசி ஆகிய இருவரும் வாதிக்கு எழுதிக்கொடுத்த விடுதலைப்பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 29.11.2023 தேதியிட்ட

கண்மணி, கலையரசி ஆகிய இருவரும் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த விடுதலைப் பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 30.11.2023 தேதியிட்ட வாதிக்கு 1ம் பிரதிவாதி தனக்காகவும் மைனர் 2ம் பிரதிவாதிக்கு பாதுகாவலராகவும், எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 25.08.2025 தேதியிட்ட வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதி மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஆன்லைனில் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிதழ் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3ம் பிரதிவாதி கையெழுத்து செய்த அஞ்சல் ஒப்புதல் அட்டையில் அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.06.04 17:53:11 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.